23.01.2026

O.S.No. **75/2018**

DW1- - **திருமால். த/பெ. குருசாமி நாடார்**

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.01.2026.

<u>குறுக்கு விசாரணை :</u> (பிரதிவாதி தரப்பில்)

1. நான் சங்கரன்கோவில் நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து ஒய்வு பெற்றேன் என்றால் சரிதான்.

2. குழந்தை செந்தில்நாதன் என்பவர் முருகையா மற்றும் பரமேஸ்வரி பராமரிப்பில்தான் இருந்து வருகிறான் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

3. குழந்தை செந்தில்நாதனை தெரியுமா என்றால் தெரியும்.

4. வாதிகள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

5. வாதிகளை எத்தனை வருடமாக தெரியும் என்றால் சுமார் 30 வருடமாக தெரியும்.

6. என் முதல் மகன் என் மீது இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 444/2019 என் மீதும் முருகையா மீதும் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

7.அசல் வழக்கு எண் 444/2019 என்ற வழக்கு இரண்டு முறை தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது, நான் ஒரு தலைப்பட்சம் தரப்பினராக இருந்தேன்.

8.அசல் வழககு எண் 444/2019 என்ற வழக்கில் தீர்ப்பு முருகையாவிற்கு ஆதரவாக இருந்ததால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

9. குழந்தை செந்தில்நாதன் வாதிகளின் தத்து பிள்ளை என தீர்ப்பு செய்வதில் எனக்கு எந்த பாதகமும் ஏற்படாது என்றால் அதை

நீதிமன்றம்தான் முடிவு செய்ய வேண்டும்.

10. இந்த வழக்கு நடக்கும் சமயத்தில் நான் வாதிகளிடம் சமரசம் பேச முயற்சி செய்தேன் என்றால் இல்லை.

11. நான் வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றும்,இந்த வழக்கை நான் விட்டுக்கொடுக்கும் படியும் அசல் வழக்கு எண் 444/2019 வழக்கை முருகையா விட்டுக்கொடுக்க வேண்டும் எனவும், சமரசம் பேசுகிறேன் என்றும், நான் தற்போதுமாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12. நான்தான் இந்த வழக்கில் தாமாக தரப்பினராக சேர்த்து வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல.

13. அசல் வழக்கு எண் 444/2019 முருகையாவிற்கு ஆதரவாக தீர்ப்பு ஆனதால் பொறாமை கொண்டு இந்த வழக்கை நான் எதிர்க்கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

14. குழந்தை செந்தில்நாதன் பிறப்பு சான்றிதழ் வாதியின் படிப்பு அறிவு இல்லாதாலும், கவனக்குறைவாகவும் பெறப்பட்டது என்றால் சரியல்ல, அது போலியாக பெறப்பட்டது.

15.குழந்தை செந்தில்நாதன் பிறப்பு சான்றிதழ் போலியாக பெறப்பட்டதால்தான் நான் அதை ரத்து செய்ய வட்டாச்சிரியம் ஆட்சேபனை செய்தேன் என்றால் சரிதான்.

16. குழந்தை செந்தில்நாதனின் பிறப்பு சான்றிதழ் ரத்துசெய்வதற்கு பொறாமை காரணமாக மனு செய்தேனா நல் எண்ணத்தில் அடிப்படையில் மனு செய்தேனா என்றால் நல் எண்ணத்தில் அடிப்படையியல் தான் மனு செய்தேன்.

17. வீ.கே.புதூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் எத்தனை பிறப்பு சான்றிதழ் போலியாக பெறப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

18. வீ.கே.புதூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் போலியாக பிறப்பு

சான்றிதழ் பெறப்பட்டது என எத்தனை ஆட்சேபனை மனு கொடுத்துள்ளேன் என்றால் மைனர் செந்தில்நாதன் மனுவை தவிர வேறு எந்த மனுவும் தரப்படவில்லை.

19.மைனர் செந்தில்நாதனின் பிறப்பு சான்றிதழ் ரத்து செய்யப்பட்டவுடன் எனக்கும் முருகையாவுக்கும் உள்ள பிரச்சினை முடித்துவிட்டது என்றால் சரிதான்.

20. பி.வா.சா.ஆ,1 ஆவணமானது குழந்தை செந்தில்நாதனின் பிறப்பு சான்றிதழை 11.01.2018 ம் தேதி வட்டாட்சியர் ரத்துசெய்வதற்கான உத்தரவு என்றால் சரிதான்.

21. பி.வா,சா,ஆ,1 ஆவணத்திற்கு பின்பு தான் நான் சுரண்டை காவல் நிலையத்தில் வாதிகள் மீது பி.வா.சா.ஆ,.3 புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

22. பி.வா.சா.ஆ,1 ஆவணத்திற்கு பின்புதான் நான் வாதிகளுக்கும், அரசு உயர் அதிகாரிகளுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு பி.வா.சா.ஆ 2 அனுப்பினேன் என்றால் சரிதான்.

23. பி.வா.சா.ஆ–2 மற்றும் பி.வா.சா.ஆ–3 ஆகிய இரண்டும் வாதிகளை அலைகழிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

24. குழந்தை செந்தில்நாதன் எங்கு படிக்கிறார், எங்கு வசிக்கிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

25. குழந்தை செந்தில்நாதன் வாதிகளின் தத்து குழந்தை என தீர்ப்பு வழங்குவதில் ஆட்சேபனை இல்லை என்றால் நீதிமன்ற உத்தரவுக்கு கட்டுப்படுகிறேன்.

26. குழந்தை செந்தில்நாதனை வாதிகள் தத்து எடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

27. முருகையா மகேஷ்வரிக்கும், இரமேஷ்பிரபு அன்னபூரணிக்கும் ஏற்பட்ட பிரச்சினைக்கும் எனக்கு எந்த வித தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

28. வாதிகளில் வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்க வேண்டும் என்றால் நீதிமன்ற உத்தரவுக்கு கட்டுப்படுகிறேன்.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி.